# சாக்கடை கழிவு அகற்றல் அமைப்பு நான்காவது தெற்காசிய மாநாடு

## “சாக்கடை கழிவு அகற்றல் வாழ்க்கையை மேலும் சிறப்புறச் செய்யும்”

## 4 – 7 சித்திரை 2011

## கொழும்பு, இலங்கை

## கொழும்பு பிரகடனம்

நாங்கள், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், மற்றும் இலங்கையை சேர்ந்த தலைமைப் பிரதிநிதிகள் 4வது தெற்காசிய சாக்கடை கழிவு அகற்றல் அமைப்பு மாநாடு இலங்கையின் கொழும்பில் சித்திரை மாதம் 4 – 7 2011ல் நடைபெற்ற போது அமைச்சர்கள், அடிமட்ட சமுதாய மாற்றத்திற்காக ஈடுபடுவோர், பொதுஜன அமைப்பு அங்கத்தவர்கள், நிறுவன பிரிவு வேலைகளில் நிபுணத்துவம் கொண்டவர்கள், சமூக அங்கத்தினர், அறிவுத்துறை சார்ந்தவர்கள், மக்கள் அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அபிவிருத்தி பங்காளர்கள், தனியார் பிரிவு மற்றும் பாடசாலை பிள்ளைகள் ஆகியோர் பங்குபற்றி இருந்தோம்.

1) தெற்காசியாவில் சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் மாற்றமின்றி பிரச்சனைக்குரியதாக இருந்து கொண்டு இருக்கின்றது என்பதை *ஏற்றுக்கொள்ளுதல்.* திறந்த வெளியில் மலசலம் கழிப்போர் அல்லது சாக்கடை கழிவு அகற்றல் முன்னேற்றமடையாத மிக உயர்ந்த மட்டத்தில் மாற்றமின்றி உள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. கடைசியாக நடைபெற்ற SACOSAN கூட்ட காலப்பகுதி வரையில் 750,000 பிள்ளைகள் வயிற்றோட்டத்தால் பிரதேச மட்டத்தில் இறந்துள்ளனர். இந்நிலை தரக்குறைவான சாக்கடை கழிவு அகற்றலுடன் தொடர்புடையதை காணலாம்.
2) சாக்கடை கழிவு அகற்றல் சமுதாயத்தை வலுவூட்டும் ஆற்றல் கூறுகளை கொண்டுள்ளதென்பதை *அடையாளம் காண்பதோடு* இது அபிவிருத்திக்கான நுழைவு புள்ளியாக கொள்ள கூடியதாக இருக்க முடியும்.
3) SACOSAN பெறுமானங்களை செயற்படுத்தும் கையாளும் ஆற்றல் அரசியலுக்கு உண்டென்பதை *உறுதிபட கூறுவதோடு*, சர்வதேச ஐந்தாண்டு சாக்கடை கழிவு அகற்றல் நிலையான பயணிப்பிற்கு ஆதரவாகவும் மற்றும் முழுமையான சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதாரம் பேணல், டாக்கா பிரகடன கொள்கை (ஐப்பசி 2003), இஸ்லாமாபாத் (புரட்டாதி 2006), புதுடெல்லி (கார்த்திகை 2008)ளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளவற்றை மீண்டும் உறுதிப்படுத்தி கொள்வதும் ஆகும்.
4) எங்களின் நிலையான சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் தெற்காசிய மக்கள் யாவருக்கும் சுகாதாரம் போன்ற அனைத்து ஆதாரங்களையும் உண்மைகளையும், திட்டங்களையும் கண்டுபிடிக்க இணைந்த ஆய்வை மீள் புதுப்பித்து கொள்ளல்.

மேலும் இவ் மீள் புதுப்பித்தலை எதுவித எதிர்ப்புமின்றி ஏற்பதோடு நமது அர்ப்பணிப்பையும் தெரிவிக்கின்றோம்.

(1) ஐக்கிய நாடுகளின் அண்மைக்கால சனிரேசனுக்கான உரிமையை ஏற்றுக்கொண்டுள்ளதென்பது இவற்றை மேலும் மேலும் வழப்படுத்தி திட்டங்களிலும், நிகழ்ச்சிகளிலும், உணரச்செய்வதோடு சட்டவாக்கங்களிலும் இடம் பிடிப்பதாகும்.
(2) கால அளவுடன் கூடிய திட்டமொன்றை உருவாக்கி அதற்குரிய வழங்களை ஓதுக்கி அவற்றை ஏற்பாடு செய்து SACOSAN முன்னைய அர்ப்பணிப்புக்களை அடைதல்.
(3) சந்தர்ப்ப - விவரமான சமனானதும், உள்வாங்கப்பட்டதுமான சனிற்ரேசன் மற்றும் சுகாதார நிகழ்ச்சிகளை திட்டமிட்டு வழங்குவதோடு இது வறுமைப்பட்ட மற்றும் ஓதுக்கப்பட்ட குழுக்களினதும் சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதார நிகழ்சிகளையும் உள்ளடக்கிய கிராமம் மற்றும் நகர இடங்களிலும் இது அதிகமாக தேவையானவர்கட்கு வெளிப்படையான நிதி உதவி செய்வதையும், இவற்றை செய்யும் பொழுது சுற்றுப்புறச்சூழல் மற்றும் அவசர தேவைகட்கு பதிலளித்தல் மற்றும் காலநிலை மாற்றத்தையும் கவனத்திலெடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அவசியம் உண்டு.
(4) WASH சுருக்க விபர அறிக்கையை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தி ஒவ்வொரு புதியதும் மற்றும் நடைமுறையிலுள்ளதுமான பாடசாலைகளில் குழந்தை - தோழமை கொண்ட மலசலகூடம் பெண் பிள்ளைகட்கு வேறாகவும் ஆண் பிள்ளைகட்கு வேறாகவும், அத்தோடு மாதவிடாய் சுகாதார முகாமைத்துவம் செய்யக்கூடியதான வசதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
(5) ஓர் தேசிய மட்டத்திலான குழுவை சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதாரத்தை ஒழுங்குபடுத்த பொறுப்புகள் மற்றும் அவற்றை இணைக்கும் வேலையை கவனிப்பதற்காக ஸ்தாபித்து அதில் எல்லா உர்த்துடையோரையும் ஈடுபடுத்தி கொள்ள வேண்டும். இது நிதிக்கு பொறுப்பானவர்கள், சுகாதாரம், பொது சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல், நீர், கல்வி, பால்நிலை மற்றும் தேசிய, உப தேசிய மற்றும் உள்ளூராட்சி அரசாங்கங்களோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வேண்டிய தொன்றல்ல.
(6) சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதாரத்திற்கென விவரமான பொதுப் பிரிவு காசு ஓதுக்கீட்டை ஸ்தாபித்தல்.
(7) காலப்போக்கில் சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதாரத்திற்கு தேவையான ஓதுக்கீட்டை முன்னேற்றகரமான முறையில் அதிகரித்தல்.
(8) சாக்கடை கழிவு அகற்றலுக்கு மக்களின் சொந்த பங்களிப்பை அடையாளம் காண்பதோடு கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள் இவற்றில் மக்கள் முதலீடு செய்யவும், கட்டுப்படுத்தவும் வலுப்படுத்துவதை உறுதிப்படுத்துவதோடு தமது சாக்கடை கழிவு அகற்றுதல் பிரச்சனைக்கு தீர்வு காண்பதை முயற்சிக்கையில் வறுமையிலுள்ளோரையும் பாதுகாத்து கொள்ள வேண்டிய தேவையையும் கண்டுகொள்ள வேண்டும்.
(9) கண்காணித்தல் குழப்பங்களற்ற பொறிமுறை வகிபாத்திரம் மற்றும் பொறுப்புக்களுடன் அபிவிருத்தி செய்வதை வரையறுத்துக்கொள்ளுவதோடு, மதிப்பீட்டிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான குறியீடுகள், செயற்பாட்டு அறிக்கைகள் மற்றும் விளைவுகள் ஒவ்வொரு மட்டத்திலும் குடும்பம் மற்றும் சமூகம் அடங்கலாக, இது சொற்ப அளவான மக்களினதும், பாதுகாப்பற்ற குழுக்களினதும் ஒருங்கிணைக்கப்படாத விளைவுகளின் அறிக்கைகளுக்கு அனுமதியளிக்கின்றது.

(10) மதிப்பீட்டு பொறிமுறையில் விஷேட குறியீடுகளை முன்னுரிமை அளவுகளில் சேர்த்து கொள்ளுதல். அவைகள். பாடசாலைகளில் WASH கடைப்பிடித்தல், கைகழுவுதல், மற்றும் மாதவிடாய் சுகாதாரம் போன்றவையும் கொண்டமைந்ததாகும்.

(11)பங்குபற்றுதல், உள்ளடக்குதல் மற்றும் சமூக வகைகூறல் பொறிமுறை, திட்டமிடல் தொடக்கம் நடைமுறைப்படுத்தல் வரைக்கும் எல்லா சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதார நிகழ்சிகளும் சமூக மட்டத்திலும், விஷேடமாக அதிகுறைந்த அளவான பகுதிகளையும், குறைபாடுகள் உள்ள குழுக்களையும் உள்ளடக்கம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

(12)சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதாரத்தை நடைமுறைப்படுத்தும் செயலாற்றலை கட்டியெழுப்புதல் மற்றும் வலுவூட்டல், இது மேலதிக கல்விக்கான முதலீட்டையும், பாடவிதான அபிவிருத்தி, ஆராய்சி மற்றும் அபிவிருத்தி, அறிவு பரிமாற்றம், கூட்டு பங்காண்மை அபிவிருத்தி போன்றவற்றையும் உள்ளடக்கியதாகும்.

(13)SACOSAN செயல்முறையை தொடர்ச்சியாக வினைத்திறனோடு செய்வதை உறுதிப்படுத்தவும், இதற்கு எதிரான அறிக்கைகளுக்கான அர்ப்பணிப்பையும் மற்றைய அர்ப்பணிப்புகளையும் நேபாள தேசத்தில் இன்னும் இரு வருட காலத்தில் சந்திக்கும் போது நிதி, சுகாதாரம், கல்வி மற்றும் தொடர்புடைய அமைச்சுக்களுக்கும் எதிர்கால கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல்.

(14)SACOSAN 111 ல் ஆயத்தப்படுத்தப்பட்ட உள்நாட்டு செயல்முறை சுய அறிக்கை கண்காணித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் புதுடில்லி தீர்மானங்களுக்கு உதவியளித்தல். அத்தோடு வருடாந்த கூட்டங்களை நாடுகளுக்கிடையிலாக தொழிற்படும் SACOSAN 1 நடைமுறைப்படுத்துவதோடு அதன் முன்னேற்றத்தையும் மறுபரிசீலனை செய்யும்.

நாங்கள் மேலும் அழைப்பு விடுக்கின்றோம்

அபிவிருத்தி வங்கிகள், வெளி உதவிகள் வழங்கும் முகவர்கள், அத்தோடு தனியார் பிரிவுகள் தமது உதவிகளை எமது வேலைக்காக அதிகரிக்கவும், நிதி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதார ஊக்கவிப்பிற்கு வழங்கவும், அத்தோடு சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதாரத்திற்கான உதவி இணைப்புக்களை தெற்காசியாவில் மேம்படுத்தவும்.

சார்க் சாக்கடை கழிவு அகற்றல் மற்றும் சுகாதாரம் பற்றியும் அதனுடைய வேலை திட்டத்துடன் சேர்த்தக் கொள்ளுவதோடு SACOSAN உடன் தொடர்பையும் ஏற்படுத்தி கொள்ளல்.

ஐக்கிய நாடுகள் புதிய அபிவிருத்தி பரம்பரை குறிக்கோள்களை 2015 பின் தொடர்வாக உருவாக்கும் பொழுது தெற்காசிய நாடுகளிலுள்ள உண்மையான பிரிவுகளை கவனத்தில் கொள்ளுவதோடு WHO/UNICEF இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சிகளில் திருத்தங்கள் செய்ய சிந்திக்கையில் கண்காணிப்புகள் பரந்த சமூக விளைவாகவும் அதிகூடிய எண்ணிக்கையிடையே பகிர்ந்து கொடுக்கப்பட்டதாகவும் மற்றும் சமூக மலசலகூடம் பகுதியாகவும் தெற்காசியாவில் இருக்க வேண்டுமென்பதை கணக்கிலெடுத்தல்.

எமது மிகப் பெரிய பாராட்டுதலை இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் மக்களுக்கும் தெரிவிப்பதோடு இவ் நிகழ்சியை சிறப்பான முறையில் நடத்தியதற்கும் அவர்களின் பரந்த மனப்பான்மைக்கும் உபசரிப்பிற்கும் எமது பாராட்டுதலை தெரிவிக்கின்றோம்.

---

3/page

கையொப்பங்கள்

| | |
|---|---|
| ______________________<br>மாண்புமிகு ஐறுலா மன்சூர்<br>அமைச்சர் கிராமிய மறுவாழ்வு மற்றும் அபிவிருத்தி<br>இஸ்லாமிய குடியரசு ஆப்கானிஸ்தான் | ______________________<br>சியாட் மஜ்புக் கசன்<br>மேலதிக செயலாளர்<br>அமைச்சு உள்ளூராட்சி கிராமிய அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு, மக்கள் குடியரசு<br>பங்களாதேஷ் |
| ______________________<br>திரு. ஸ்காரம் துலால்<br>துறை வல்லுனர், அமைச்சு தொழிற்படு மற்றும் மனித குடியேற்றம்<br>றோயல் பூட்டான் அரசாங்கம் | ______________________<br>மாண்புமிகு சிறீ விலாஸ்ரா தேஷ்முக்<br>அமைச்சர் கிராமிய அபிவிருத்தி மற்றும் பஞ்சாயத்து ராச்சிய பேரமைப்பு குடியரசு<br>இந்தியா |
| ______________________<br>மாண்புமிகு மொகமட் அஸ்லம்<br>அமைச்சர் வீட்டுதிட்டம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் மாலைதீவு<br>குடியரசு | ______________________<br>மாண்புமிகு றொப் பகதுர் றாயமஜ்ஜித்<br>அமைச்சர் பௌதிக திட்டமிடல் மற்றும் தொழிற்பாடு<br>நேபாள அரசாங்கம் |
| ______________________<br>மாண்புமிகு எஜ்ஜினியர் சௌசாட் உல்லா<br>அமைச்சர் மாநிலங்கள் மற்றும் எல்லை பிரதேசம்<br>இஸ்லாமிய குடியரசு<br>பாகிஸ்தான் | ______________________<br>மாண்புமிகு தினேஷ் குணவர்த்தன<br>அமைச்சர் நீர்விநியோகம் மற்றும் வடிகால் அமைப்பு ஜனநாயக சோசலிச குடியரசு<br>இலங்கை |